# தமிழ்த்துறை


## பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

(தேசிய தரமதிப்பீட்டுக் குழுவால் A தரத்தகுதி பெற்றது)

விளார் புறவழிச்சாலை, தஞ்சாவூர் - 613 006


# தமிழ்த்துறைச் செய்திமடல்



"கல்வியைப் பரப்புகிறவன் இறைவனால் போற்றப்படுகிறான்" "கல்வியைப் பரப்புகிறவன் பாவங்களிலிருந்து விடுதலை பெறுகிறான்." "கல்வியறிவே சமுதாயத்திற்கு அணிகலன்" என்பதற்கிணங்க நாட்டின் வருங்காலமே கல்விக்கூடங்களின் கைகளில் தான் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவர்களையும் சிறந்த நிலைக்குக் கொண்டு வரும் பணியானது கல்வி என்னும் கருவறையில் தான் உருப்பெறுகிறது. அப்படிப்பட்ட சிறப்பானதொரு கல்வியை மாணவ சமுதாயத்திற்கு இடையறாமல் வழங்கிக் கொண்டிருக்கும் பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி "நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும்" தஞ்சை தரணியில் 2002 ஆம் ஆண்டு அருகு போல் வேரூன்றி இன்று ஆல்போல் தழைத்து செம்மாந்து செயலாற்றி வருகின்றது.

## தமிழ்த்துறை



பகுதி-I தமிழை மொழிப்பாடமாகப் பயிற்றுவித்து வரும் "தமிழ்த்துறை" சீரோடும் சிறப்போடும் புதுப்பொலிவோடும் இயங்கி வருகிறது. இத்துறையில் முனைவர்பட்டம் பெற்ற ஏழு உதவிப்பேராசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். தமிழ்த்துறையின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் "தென்தமிழ்ப்பாவை" இலக்கிய மன்றத்தின் கீழ் கருத்தரங்குகள், கலை விழாக்கள், சொற்பொழிவுகள், முத்தமிழ் விழா, மன்றத்தேர்வு, மாணவர்களின் கவித்திறனையும், படைப்பாற்றலையும் வெளிக்கொணரும் விதமாக கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, வழக்காடுமன்றம் என பல்வேறு வகையான போட்டிகள், நடத்தப்பெறுகின்றன. எமது துறையின் மாபெரும் வளர்ச்சிக்கு உறுதுணையான நிகழ்வுகளைச் செய்திமடலாக வெளியிடுகிறோம்.

## தமிழ்த்துறைப் பேராசிரியர்களின் பிற பங்களிப்புகள்

### சொற்பொழிவு

முனைவர் க.ஆனந்தி அவர்கள் 15.07.2015 அன்று திருத்துறைப்பூண்டி புனித தெரசாள் உயர்நிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளை முன்னிட்டு மாணவிகளுக்கு காமராஜரின் கல்விப்பணி மற்றும் வாழ்க்கையைப் பற்றி சொற்பொழிவாற்றினார்




### 17.08.2015 &18.08.2015 முத்தமிழ் விழா

17.08.2015, 18.08.2015 ஆகிய இரு நாட்களும் தமிழ்த்துறையின் சார்பாக முத்தமிழ் விழா நடைபெற்றது. பயனற்ற பொருட்களிலிருந்து பயனுள்ளவைகளைத் தயாரித்தல், கேலிச்சித்திரம் வரைதல், ஆங்கிலம் மற்றும் தமிழ் பேச்சுப்போட்டி, கர்நாடக சங்கீதம், நடனம், ஓவியம், வினாடி-வினா, நாடகம், மேற்கத்திய இசை ஆகியவற்றில் குழுவாகவும், தனியாகவும் போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவிகளிடையே கலை உணர்வினைத் தட்டியெழுப்பும் வண்ணம் இப்போட்டிகள் அமைந்திருந்தன.





### தமிழ்மன்றத் தேர்வு

மாணவிகளிடையே தமிழார்வத்தைத் தூண்டும் வண்ணம் ஒவ்வொரு வருடமும் தமிழ் மன்றத் தேர்வுகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பிடிப்போருக்கு பணப்பரிசுகளும், சான்றிதழும், பதக்கமும் வழங்கப்படுகின்றன.




### 05.10.2015 ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே



பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கிடையேயான "ஆடுவோமே, பள்ளுப்பாடுவோமே" என்ற கலைவிழா நடைபெற்றது. நாட்டுப்புற நடனம் மற்றும் பாடல், மேற்கத்திய நடனம் மற்றும் பாடல், பரதம், கர்நாடக இசை போன்ற பல பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. பல கல்லூரிகள் கலந்து கொண்ட இவ்விழாவில் ஒட்டு மொத்தத்



தரப்புள்ளிகளை பாரத் கல்லூரி பெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் அருட்சகோதரி விக்டோரியா அவர்கள் தலைமையில் "கலைமாமணி" விருதுபெற்ற திரைப்படப் பாடலாசிரியர் பழநிபாரதி மற்றும் தென்னகப் பண்பாட்டு மைய இயக்குநர் முனைவர்.சஜித், முன்னாள் மாணவியர் சங்கத் தலைவர் திருமதி. உஷாநந்தினி ஆகியோர் விழாவினைச் சிறப்பித்தனர். தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் கா.மீரா வரவேற்புரையும், முனைவர் சு.சத்யா அறிமுகவுரையும், முனைவர் க.ஆனந்தி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியும், முனைவர் இரா.ஜெயஸ்ரீ நன்றியுரையும் வழங்கினார்கள். நிகழ்ச்சியில் தமிழ் மன்றத் தேர்வு, BON FEST (முத்தமிழ் விழா)போட்டிகளுக்கும், பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்த்துறை சார்பில் SAFE அமைப்பிற்கு ரூ.5000 வழங்கப்பட்டது.

### 15.10.2015 'கவிமணிச் சிகரம்' 'கவிமணிச்சுடர்' விருது

சென்னை செந்தமிழ் முற்றம் மற்றும் திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம் ஆகியன இணைந்து மேனாள் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாளையொட்டி "ஆயிரம் கவிஞர்களின் சங்கமம்' எனும் நிகழ்ச்சியை சென்னை தி.நகரில் தருமபுர ஆதின பிரச்சார சபாவில் நடத்தியது. அதில் தமிழ்த்துறையைச் சார்ந்த முனைவர் க.ஆனந்தி, சிறந்த முதல் பத்து கவிஞர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு "கவிமணிச் சிகரம்" என்ற விருது வழங்கப்பட்டது. முனைவர் கா.மீரா, முனைவர் மு.புஷ்பரெஜினா, முனைவர் சு.சத்தியா, முனைவர் க.முத்தழகி ஆகியோருக்கு "கவிமணிச்சுடர்" விருது வழங்கப்பட்டது.



### அலைகடலுக்கு அப்பால் தமிழன்

'மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் மற்றும் பிஷப் ஹீபர் கல்லூரி ஆகியன இணைந்து 19.12.2015 திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் நடத்திய "அலைகடலுக்கு அப்பால் தமிழர்களின் அடையாளங்கள்" என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் முனைவர் சு.சத்தியா அவர்கள் கலந்துகொண்டு "மொரீசியசு தீவில் தமிழர் பண்பாட்டு மரபின் அடையாளங்கள்" எனும் தலைப்பில் கட்டுரை வாசித்தார்.



### தமிழ்த்துறையின் சிறப்பு சொற்பொழிவு

தமிழ்உணர்வும், தமிழின் அடையாளங்களும் புதுப்பிக்கப்படும் வண்ணம் மிகச்சிறந்த தமிழ் அறிஞர்களை வரவழைத்து மாணவிகளிடையே எழுச்சியூட்டும் உரைகள் தமிழ்த்துறையினரால் நடத்தப்பட்டு வருகின்றன.



அவ்வகையில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறையைச் சார்ந்த பேராசிரியர் முனைவர் வெற்றிச்செல்வன் அவர்கள் "உளவியல் நோக்கில் பெண்கள்" என்ற தலைப்பில் 8.01.2016 அன்று உரை நிகழ்த்தினார். பெண்களைப் பற்றிய புதிய கண்ணோட்டத்தில் அவர் நிகழ்த்திய உரை மாணவிகளிடையே புதிய எழுச்சியைத் தோற்றுவித்தது.

**பட்டிமன்றம்**

நெல்லுக்கும், நீர் வயலுக்கும், உழவுக்கும் பெயர்பெற்ற தஞ்சாவூரின் சிறப்பினைப் போற்றும் வண்ணம் "தஞ்சாவூர் திருவிழா" ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்று வருகிறது. ஆடல், பாடல், பட்டிமன்றம் கிராமிய நிகழ்ச்சிகள் மூலம் தஞ்சையின் சிறப்பை உலகறியச் செய்துவரும் இந்நிகழ்ச்சியில் 31.1.2016 அன்று அரண்மனை வளாகத்தில் தஞ்சைக்குப் பெருமை சேர்ப்பது கழனி வளமா? கலைக்கோயில் திறமா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

"கழனி வளமே" என்ற தலைப்பில் முனைவர் க.முத்தழகியும், "கலைக்கோயில் திறமே" என்ற தலைப்பில் முனைவர் க.ஆனந்தியும் பங்கேற்றுப் பேசினர்.







"எழுத்தை ஆள்பவன் எழுத்தாளன். அவன் எழுத்துக்கு சமுதாயத்தை மாற்றியமைக்கும் ஆற்றல் உண்டு" என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாக்கை மெய்மைப்படுத்தும் விதமாக எழுத்தாற்றல் கொண்ட பேராசிரியர்கள் தம் படைப்புக்களை காவ்யா, செம்புலம், ஆய்த எழுத்து போன்ற பல்வேறு இதழ்களில் வெளியிட்டுள்ளனர்.

எமது கல்லூரி முதல்வர் முனைவர் அருட்சகோதரி விக்டோரியா அவர்கள் வழிகாட்டுதலின் படி தமிழ்த்துறையில் "விழிமின் எழுமின்" என்ற தலைப்பில் கடந்த கல்வியாண்டில் பல்வேறு செயல்பாடுகள் நடத்தப்பெற்றது. எதிர்வரும் கல்வியாண்டில் நடத்தவிருக்கும் துறைச்செயல்பாடுகள் அனைத்தும் "நெகிழியைத்தவிர்ப்போம் தலைமுறைகளைக் காப்போம்" என்ற தலைப்பில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது..

